## தேயிலைக் கைத்தொழில்: ஒரு புதிய பேணத்தக்க அணுகுமுறை

தொழிற்சங்கங்கள் செய்வது என்ன? (What do unions do?) இந்தத் தலைப்பிலான குறிப்பிடத்தகுந்த ஆக்கமொன்றில் (1984) ஹார்வாட் பல்கலைக்கழகப் பொருளியலாளர்களான றிச்சர்ட் பிறீமான் மற்றும் ஜேம்ஸ் மெடொப் ஆகியோர் தொழிற்சங்கங்களுக்கு இரண்டு முகங்கள் உண்டென்பதை எடுத்துக் காட்டினர். அவற்றுள் ஒன்று மோதல் போக்குடையது, மற்றையது ஒத்துழைப்பு தன்மைகொண்டது. தனது உறுப்பினர்களின் வேதனங்களுக்காக தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தை நடத்துகின்றபோது மோதல் போக்குகொண்ட முகம் தோன்றுகிறது முகாமைத்துவத்திற்கு தொழிலாளர் மட்ட தகவல்களை பின்னூட்டல் செய்யும்போதும் செயலாற்றுகையிலும் உற்பத்தித் திறனிலும் மேம்பாட்டைப் பேணுமுகமாக தொழிலாளர்மீது தனது செல்வாக்கைப் பயன்படுத்தும்போதும் ஒத்துழைப்பு முகம் உருவெடுக்கின்றது. பிறீமனும், மெடொப்பும் இதனை இரண்டாவது ஒத்துழைப்பு அம்சக் ''குரல்'' என்று அழைப்பர். தொழிலாளர் மட்டத்தில் திரளும் கருத்துக்களுக்கு ''குரல்'' கொடுக்கவும் முகாமைத்துவத்தின் தேவைகள் குறித்து தொழிலாளர் மத்தியில் பயன்மிக்க வகையில் ''குரல்'' கொடுக்கவும் தொழிற்சங்கங்களுக்கு முடியும்.

## தேயிலைக் கைத்தொழிலுக்கான நெருக்கடி

தற்போது இலங்கையின் தேயிலைக் கைத்தொழில் ஒரு கடும் நெருக்கடியில் உள்ளது. வேதனச் செலவு மிகவும் அதிகமாக உள்ளதெனவும் நிதிரீதியான பேணத்தக்க தன்மையை இழந்துவிடாது வேதனங்களை மேலும் அதிகரிக்க முடியாதெனவும் அக்கைத்தொழில் நம்புகின்றது. எனினும் தொழிலாளருக்குக் கிடைக்கும் வேதனம் ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி ஆகிய இருவரும் தொழில் செய்கின்றபோதுகூட அவர்களை வறுமைக் கோட்டிற்கு மேலே உயர்த்தப் போதுமானதாக இல்லை (உரு 1 ஐப் பார்க்க). கடுமையான நிலைமைகளில் நீண்ட நேரம், சிரமமான வேலை செய்தும் தொழிலாளர்கள் நிரந்தரமாக மிகவும் வறிய நிலையிலேயே உள்ளனர். இத்தாழ்ந்த வர்க்கத்தினரைக் கொண்டிருக்கவேண்டிய தேவையில் தங்கியிருக்கவேண்டியிருப்பது இலங்கையின் முதன்மையான ஏற்றுமதிக் கைத்தொழிலுக்கான ஒரு மோசமான பேணத்தக்க மூலோபாயமாகும்.

## பொருளாதாரப் பேரம்பேசல்


சுருங்கிச் சிறுத்துப்போன சந்தை நிலைமைகளில் ''பேரம்பேசலுக்கான'' வழமையான அணுகுமுறை மிகவும் தீவிரமானதென்பதை பொருளியலாளர்கள் அங்கீகரிக்கின்றனர். அதாவது, உங்கள் கால்களால் அமைதியாக வாக்களித்தல்: உயர்குடி தொழிலாளர்கள் குறைவான சம்பளம் வழங்கும் தொழிலை விட்டு விலகி கூடிய சம்பளம் வழங்கும் தொழிலை நாடிச் செல்வர். பொருளாதார வாய்ப்புகள் அதிகரிக்கின்றபோது, இது மேலும் உறுதியானதாக மாறுகிறது (இலங்கையில் வேலைவாய்ப்பற்ற வீதம் 2015 ஆம் ஆண்டின் முதல் காலாணடுப் பகுதியில் 5 வீதமாகும்).

அத்தகைய ஒரு தீவிர நடவடிக்கைக்கான ஒரு காரணம் **தனி நபர்கள்** என்ற வகையில் தொழிலாளர்களுக்கு தமது வேதனங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடத்த அல்லது நிர்வாகத்திற்கு தமது பிரச்சினைகளை முறையாக விளக்கிக்கூற முடியாது என்பதாகும். இதுவே இன்று தேயிலைக் கைத்தொழில் குறித்த நிலையாகும் (அத்தோடு, ஆடைக் கைத்தொழிலின் நிலையுமாகும்). இதற்குத் தீர்வு காணப்படாவிடில், திறமான வேலைப்படை இத்தொழில்களைவிட்டு தொடர்ந்து வெளியேறும் பிரச்சினை மேலும் தீவிரமானதாக மாறும். தீர்வு காண்பது தாமதமடைந்தால், இக்கைத்தொழில்கள்

மீண்டுவருவதற்கு மிகவும் சிரமமான – விலகிச் செல்லும் தொழிலாளர்களை மீண்டும் இதில் இணைந்துகொள்ள இணங்க வைக்கமுடியாத – ஒரு நிலைக்கு சென்றுவிடும்.

இங்குதான் தொழிற்சங்கங்களின் "குரல்" ஒரு முக்கிய பங்கு வகிக்க முடியும். தொழிலாளருக்காக "குரல்" கொடுத்து, நிர்வாகத்துடன் இரு சாராருக்கும் வெற்றி அமையக்கூடிய (றைெ-றைெ) பேச்சுவார்த்தை நடத்துவதன்மூலம் அவை தொழிலாளர் வெளியேறுவதைத் தடுக்கமுடியும். முக்கியமாக, நிர்வாகத்திற்கும் தொழிலாளருக்குமான கூட்டான ஈடுபாடு கூட்டான நன்மைகளையும் சமர்ப்பிப்பதன்மூலம் தனிநபர் பேச்சு வார்த்தைககளின் விளைவுகளளுடன் தொடர்புபட்ட சமச்சீரற்ற அதிகாரம், தகவல் மற்றும் சிறைக்கைதிகளின் தர்மசங்கட நிலை மாதிரியான விடயங்கள் ஆகியவற்றை தொழிற் சங்கங்களினால் வெற்றிகொள்ள முடியும்.

**ஒத்துழைப்பின் நன்மைகள்**




"தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் முகாமைத்துவம் ஆகிய இரு சாராருக்கும் வெற்றியளிக்கும் ஒரு தீர்வு" எனும் தலைப்பிலான முன்னைய ஏசு ஆய்வு வேதனங்களின் ஊக்குவிப்புக் கொடுப்பனவுக் கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட்டால், முகாமைத்துவம் மற்றும் தொழிலாளர் ஆகிய இரு தரப்பினரும் நன்மையடைவர் என்பதை எடுத்துக்காட்டியது. தற்போதைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுக் கட்டமைப்பு உரு 1 இல் காட்டப்பட்ட வடிவிலான நாளாந்தக் கொடுப்பனவைக் கொண்டுள்ளது.

ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு (வயதான ஒரு பெற்றோரையும் இரு சிறுவர்களையும் கொண்ட தம்பதியினர்) வறுமைக் கோட்டிற்கு மேலே எழுவதென்றால், கணவன் மனைவி இருவரும் மாதத்தில் வழங்கப்பட்ட 25 நாட்களில் குறைந்தது 19 நாட்களாவது வேலை செய்ய வேண்டும். ஏனெனில், 19 நாள் வேலை செய்யும் ஒவ்வொரு நபருக்கும் உரிய சம்பளம் ரூபா. 3680 ஆகும். சுருங்கக்கூறின், இது, சுகயீனம் அல்லது அவசரத்தேவைகள் காரணமாக மாதத்தின் ஆரம்பத்திலேயே சில நாட்கள் வேலைக்குச் செல்லாதிருந்து, அதனால் 19 நாள் இலக்கை அடைவது சாத்தியமற்றதாகத் தோன்றும்போது, வேலைக்குச் செல்வதை எளிதாக அதைரியப்படுத்தக்கூடிய ஒரு கடுமையான கொடுப்பனவு முறைமையாகும்.

இத்தகைய தொழிலாளர் தரப்பிலான கருத்துக்களுக்கு ‘‘குரல்’’ கொடுத்து நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, வேலை செய்வதை மேலும் சிறப்பாக ஊக்குவிக்கும் வேதனக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு உதவுவது தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்புப் பணியாகும். அவ்வாறு செய்தபின்னர், தொழிற்சங்கங்கள் தொழிலாளர் தமது மாதாந்த வேலை நாட்களை அதிகரிக்கவேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாகவும், கூட்டு செயலாற்றுகையின் மேம்பட்ட பெறுபேறுகளை வழங்கும் பொறுப்பை ஏற்குமாறும் தொழிலாளார்கள் மத்தியில் ‘‘குரல்’’ எழுப்பலாம். தொழிற்சங்கங்கள் அத்தகைய கூட்டாக அறிவூட்டல் மற்றும் தொழிலாளரை ஊக்குவித்தல் ஆகிய பொறுப்புகளை தாம் மேற்கொள்ளும்போது, அவை கூடுதல் பயனுள்ளவையாய் இருப்பது மாத்திரமின்றி, நிறுவனத்தின் செலவுகளை கணிசமானளவு மீதப்படுத்தவும் முடியும். இன்றேல், அந்நிறுவனங்கள், இப்பணிகளை செலவுமிக்க முகாமைத்துவத் தலையீடுகள் மற்றும் கட்டமைப்புகள் மூலம் மேற்கொள்ளவேண்டியிருக்கும்.

**தேயிலைக்கான நியாயமான வர்த்தகக் கரிசனைகள்**

இலங்கையின் தேயிலை ஓர் உலகளாவிய வர்த்தகக் குறியீடாகும். உலகளாவிய நுகர்வோர் தாம் நுகருகின்ற தேயிலையை உற்பத்தி செய்கின்றவர்களின் தொழில் நிலைமைகள் தொடர்பாக அதிகரித்த அளவில் கரிசனை கொண்டிருப்பதோடு, அது பற்றி மேலும் சிறப்பாக அறிந்து கொள்ளவும் விரும்புகின்றனர்.

இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் மிகத்தாழ்ந்த வர்க்கத்தினராக உள்ளனர் என்பது யாவரும் அறிந்த விடயமாகும். சனத்தொகையின் ஏனைய பிரிவினரோடு ஒப்பிடுகையில், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அவர்கள் தீவிரமாகக் குறைவடைந்த பொதுச்சேவைகளின் காரணமாக அல்லலுறுகின்றனர். அவர்களுடைய வீட்டு வசதிகள் சேரி நிலைமைகளைப் பிரதிபலிக்கின்றன் வேலை நிலைமையோ மழை, வெயில், காற்று, இடி, மின்னல், பனி, குளிர் என்ற இயற்கை அம்சங்களுக்கு அவர்களை தொடர்ச்சியாக ஆட்படுத்துவதாக உள்ளது. மேலே விளக்கப்பட்ட வேதனக் கட்டமைப்பிலும் வருமானத்திலுமான பிரச்சினைகள் இவையனைத்தையும் மேலும் மோசமானதாக்குகின்றன.

தேயிலை ஏற்றுமதியாளர்கள் தீவிர கவனம் மேற்கொள்ளவேண்டும். தொழிலாளருக்கான செலவுகள் என்பதில் குறுகிய மனப்பான்மையோடு அளவுக்கதிகமாக கவனஞ் செலுத்திக்கொண்டிருப்பது எதிர் விளைவு கொண்டதாக மாறலாம். ஒரு வர்த்தகப் பொருள் உலகளாவிய கண்காணிப்பாளர்களினால் தொழிலாளர் உரிமைகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்டு ஒதுக்கிவைக்கப்பட்ட பின்னர், அந்தப் பொருளின் மதிப்பு எளிதாக மீட்டெடுக்கப்படுவதில்லை. வெள்ளம் வருமுன்னே அணை கட்டுவதுதான் சிறந்தது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தம்மீதான மீள்பேச்சுவார்த்தை 2015 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் தொடங்கி இன்னும் நடைபெற்று வருகிறது. தொலிற் சங்கங்களுக்கும் நிர்வாகத்திற்கும் இது ஓர் உரிய சந்தர்ப்பமாகும். நிர்வாகம் தொழிற் சங்கங்களின் மோதல் போக்கு கொண்ட முகத்திற்கு அப்பால் பார்வையைச் செலுத்தி, அவற்றின் ஒத்துழைப்பு முகத்தை நாடவேண்டும். அதனைச் செய்யத் தவறுவதானால் ஏற்படும் இழப்பு தொழிலாளருக்கு மட்டுமின்றி, இக்கைத்தொழிலுக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்குமே பாரதூரமானதாகும்.

வெறீட் ரிசேர்ச் பொருளியல், சட்டம், அரசியல் மற்றும் ஊடகம் ஆகிய துறைகளில் உயர் மட்ட தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கு மூலோபாய பகுப்பாய்வுகளை வழங்கும் கொழும்பைத்

தளமாகக்கொண்ட சுயாதீனமான ஒரு சிந்தனைக் குழாமாகும். உங்கள் கருத்துரைகள் வரவேற்கப்படகின்றன. மின்னஞ்சல் ¨ரடிடஉைஉயவஉைளெ;எநசவைநசநளநயசஉா.ழசப்